IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.14/2025

Deposition of Witness for P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.கணேசன் |
| OCCUPATION | - | சிறப்பு உதவி ஆய்வாளர், போக்குவரத்து துறை வேலூர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>-

நான் தற்போது சிறப்பு உதவி ஆய்வாளராக போக்குவரத்து துறை வேலூரில் பணிபுரிகிறேன். கடந்த 21.07.2023 தேதி விருதம்பட்டு காவல் நிலையத்தில் நான் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது ஆய்வாளருக்கு வந்த ரகசிய தகவலின் பேரில் நான் காவல் உதவி ஆய்வாளர் ஆதர்ஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் இளங்கோவன், காவலர் சீமோன், அல்தாப் பாஷா ஆகியோர் காங்கேயநல்லூர் ரோட்டில் உள்ள சத்தியா லாட்ஜில் இரண்டாம் தளத்தில் உள்ள அறை எண் 206 ல் சோதனை செய்ய 5 நபர்கள் இருந்தார்கள். ஆஜர் எதிரிகள் 4 நபர்கள் அங்கு இருந்தார்கள். ஆய்வாளர் காரணம் கூறி 14.30 மணிக்கு கைது செய்தார். 1ம் எதிரி வசூல் ராஜாவிடமிருந்து கார், வீச்சரிவாள், சையத் மன்சூரிடமிருந்து சின்ன கூர்மையான கத்தி , 3ம் எதிரி கௌஷ் பாஷாவிடமிருந்து சின்ன உருட்டுக் கட்டை 2 அடி, வெள்ளை மோகனிடமிருந்து 2 1/2 அடி உருட்டுக் கட்டை மற்றும் 2 அடி உருட்டுக் கட்டை ஒன்று ஆகியவற்றை மகசரில்

கைப்பற்றினார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.1 முதல் 5. கார் புகைப்படம் அ.த.சா.ஆ.6, வீச்சரிவாள் சா.பொ.1, சின்ன கூர்மையான கத்தி சா.பொ.2, சின்ன உருட்டுக் கட்டை 2 அடி சா.பொ.3, 2 1/2அடி உருட்டுக் கட்டை சா.பொ.4, 2 அடி உருட்டுக் கட்டை சா.பொ.5. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.7. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை-

எங்களுக்கு தகவலை காவல் ஆய்வாளர் தான் சொன்னார். காவல் நிலையத்தில் வைத்து எங்களுக்கு தகவல் சொன்னார். சோதனைக்கு போகும்போதே காவல் ஆய்வாளர் எதிரிகளின் பெயரை சொல்லவில்லை. Lodge ல் சோதனை செய்யும்போது தான் எதிரிகள் அவர்களின் பெயர்களை சொன்னார்கள். நாங்கள் காவல் நிலையத்திலிருந்து அருகாமையில் lodge இருந்ததால் நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டோம். காவல் ஆய்வாளர் Jeep ல் வந்தார். காவல் நிலையத்திலிருந்து சத்தியா Lodge 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். காவல் ஆய்வாளரே விசாரணை செய்தார். கைப்பற்றுதல் மகசர் lodge ல் தான் தயார் செய்தார். கைப்பற்றுதல் மகசரை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றும் அதனால் தான் கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது புள்ளி விவர கணக்கிற்காக ஆய்வாளரது உத்தரவின் பேரில் எதிரிகள் மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 06.03.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.03.06 18:15:22 +0600

Additional District Judge(FTC),
Vellore